மிகவும் ஏழ்மையான குடும்பம். அவரைப் பிரிந்து வறுமையால் வாடும் அந்தக் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் எங்கள் அம்மா ஆட்சியின்போது இரவும் பகலும் மருத்துவர்கள் இருந்து வந்தார்கள். Caesarean operation-கூட அங்கே நடந்தது. ஆனால், இப்போது மருத்துவர்கள் இல்லை. Post-mortem செய்வதற்குக்கூட கோவில்பட்டியில் இருந்துதான் deputation அடிப்படையில் மருத்துவர்கள் வருகிறார்கள். ஆகையால், அங்கு நிரந்தரமாக மருத்துவர்களை நியமிக்க வலியுறுத்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே குறிப்பிட்டுள்ளதுபோல, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி என்கிற 45 வயதுடைய முனியசாமி தேவர், காப்பாற்ற பலர் முயற்சி செய்தும்கூட பலனின்றி பெருமழையிலே நீரில் மூழ்கி இறந்துவிட்ட சோகச் சம்பவத்தை எடுத்துச் சொல்லி, அந்தக் குடும்பத்திற்கு நிதியுதவி தரவேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள். தொடர்ந்து இதுபோன்ற இரங்கத்தக்க, வேதனையான எந்தச் சம்பவமானாலும் இந்த ஆட்சி அந்தக் குடும்பத்தைக் கைவிட்டதில்லை. அந்தவகையில் அவர்கள் சொன்னார்கள், அம்மா ஆட்சியில் யார், யாருக்கு எத்தகைய உதவிகள் செய்யப்பட்டன என்று. இந்த ஐயா ஆட்சியிலும் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அந்த உதவிகள் தொடரும் என்பதை அருமை நண்பருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(ஊ) மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் பணியிடங்களை நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No. எல்லோரும் உட்காருங்கள். "மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் முக்கியப் பணியிடங்கள் காலியாக உள்ளதால், நுகர்வோர் தங்களது குறைகளைத் தெரிவிக்க இயலாத நிலை நிலவுவது குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையிலே எடுத்துக்கொள்கிறேன். திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)

2008 ஏப்ரல் 21]

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

(எ) ஆண்டிப்பட்டி, உடுமலைப்பேட்டை, அரசியல் கட்சிகளின் தேர்தலின்போது ஏற்பட்ட பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. திரு. சண்முகவேலு, இது உட்கட்சிச் சண்டை. நான் சொல்கிறேன் கேளுங்கள். ஆண்டிப்பட்டியிலும் சண்டை போட்டிருக்கிறீர்கள், உடுமலைப்பேட்டையிலும் சண்டை நடந்திருக்கிறது. இது உங்கள் உட்கட்சிச் சண்டை. இரண்டு கட்சிகளுக்குள் தேர்தலின்போது நடந்த நிகழ்ச்சி. (குறுக்கீடுகள்) பிறகு பார்க்கலாம். திரு. சிவபுண்ணியம், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் சட்டமன்ற உறுப்பினரே அடிபட்டதாக பேப்பரில் வந்திருக்கிறது, பார்த்தீர்களா! உங்கள் கட்சிச் சண்டையில், உங்கள் சட்டமன்ற உறுப்பினரே அடிபட்டதாக பேப்பரில் வந்திருக்கிறது. இதுவெல்லாம் உட்கட்சி விவகாரங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) அதேமாதிரி தி.மு.க.-வைச் சேர்ந்த திரு. லட்சுமணன் என்கிற சட்டமன்ற உறுப்பினர் என்னிடம் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். "தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் அ.இ.அ.தி.மு.க. நிர்வாகிகள் தேர்தலில் இளம் பெண்கள், இளைஞர்கள் பாசறையில் அடிதடி, ரகளை ஏற்பட்டு, பொது மக்கள் அலறியடித்து ஓடியதால் ஏற்பட்ட பதட்டம் குறித்து" என்று அவரும் ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) இதெல்லாம் உட்கட்சி விவகாரம், இரண்டு பக்கமும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் எடுக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

முற்பகல் 10-30

(ஊ) மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் பணியிடங்களை நிரப்புதல்—தொடர்ச்சி

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலே மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுடைய தலைவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று செய்தி பல மாவட்டங்களிலிருந்து வந்திருக்கின்றது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் உட்கட்சி விவகாரம். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: இதன் காரணமாகவே பொது மக்கள் தங்களுடைய குறைகளைச் சொல்வதற்கு வாய்ப்பில்லாத நிலைகள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுடைய தலைவரை நியமிப்பதிலே ஏன் காலதாமதம் ஏற்படுகிறது? தலைவரை நியமிப்பதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு இருக்கிறதா அல்லது அரசுக்கு இருக்கிறதா? அப்படி அரசுக்கு இருக்கிறது என்று சொன்னால், ஏன் அந்தத் தலைவர்களுடைய நியமனத்தைச் செய்யாமல் அரசு காலம் தாழ்த்துகிறது என்பதை அறிய விரும்புகிறேன். இதன்மூலம் மக்கள் பாதிக்கப்படுவார்கள். உடனடியாக இந்தப் பணியிடங்களை நிரப்புவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் தமிழகத்தைப் பொறுத்தளவிற்கு 11 இடங்களில் தலைவர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்த 11 இடங்களிலே 9 மாவட்டக் குறைதீர் மன்றங்களுக்கு அருகிலேயுள்ள மன்றங்களின் தலைவர்கள் பொறுப்பாளர்களாகப் போடப்பட்டு, அந்தந்த மாவட்ட குறைதீர் மன்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், அங்கு இருக்கிற நுகர்வோர்கள் எல்லாம் அந்தந்த மன்றங்களுக்குச் சென்று தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். நிவாரணங்கள் வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. மாவட்டக் குறைதீர் மன்றங்களுடைய தலைவர்களை நியமிக்கிற அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு இருக்கிறதா, அரசுக்கு இருக்கிறதா என்று ஒரு வினாவை எழுப்பினார்கள். அரசுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. அரசைப் பொறுத்தளவிற்கு என்னவென்று சொன்னால், சட்டம் 1986 பிரிவு 10(1) -ன்படி நுகர்வோர் மாவட்டக் குறைதீர் மன்றத்தினுடைய தலைவரை நியமிக்கிற அதிகாரம்-மாநில அளவிலே இருக்கிற அதனுடைய தலைவர், துறையினுடைய செயலாளர், சட்டத் துறைச் செயலாளர் மூவரும் அந்தக் குழுவிலே இடம் பெறுகிறார்கள். அந்தக் குழுவிலே இடம் பெற்று அவர்கள் கொடுக்கிற பட்டியலை

அரசு ஏற்று, ஆணை பிறப்பித்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைதீர் மன்றத்தினுடைய தலைவரை நியமனம் செய்கிறோம்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயே 4 மாவட்டக் குறைதீர் மன்றங்களில் தலைவர் பதவி காலியாக இருந்தது. இது தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக கிட்டத்தட்ட 8 இடங்களில் தலைவர் பதவி இடம் காலியானது. அதனுடைய அடிப்படையிலே 3-8-2007, 3-10-2007, 4-11-2007, 11-01-2008 மற்றும் 27-2-2008 ஆகிய 5 நாட்களில் அரசின் சார்பாக மாநில குறைதீர் மன்றத்தினுடைய ஆணையாளருக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதினோம். ஆனால், கூட்டம் கூட்டப்படவில்லை. அவர் கூட்டத்தைக் கூட்டி, அதிலே துறையினுடைய செயலாளரும், சட்டத் துறைச் செயலாளரும் இடம் பெற்று, பட்டியல் தயாரித்து, அரசாங்கத்திற்கு வந்தால்தான் ஆணை பிறப்பிக்க முடியும். கூட்டமே கூட்டப்படவில்லை. ஆனால், அதனுடைய பதிவாளராக இருந்தவர் என்ன குறிப்பிட்டார் என்று சொன்னால், இதுசம்பந்தமாக உயர் நீதிமன்றத்திலே நீதிப் பேராணை மனு 11680/06-ல் திருமதி தாரா முரளி என்பவர் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார். அந்த வழக்கினுடைய தீர்ப்பு வந்தவுடனேயே நாங்கள் கூட்டத்தைக் கூட்டுகிறோம் என்று. அதனுடைய ஆணையாளருடைய சார்பாக பணியாற்றுகிற பதிவாளர் அவர்கள், அரசின் சார்பாக பதில் கடிதம் அனுப்பினார்கள். 2-4-2008 அன்று உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பளித்திருக்கிறது. 17-5-2007 நாளிட்ட தேசிய நுகர்வோர் குறைதீர் மன்றம் National Consumer Commission, அதனுடைய ஷரத்திற்கும், 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட விதிகளுக்கு முரண்பாடாக அந்தத் தீர்ப்பு இருக்கிற காரணத்தினால், மேல்முறையீடு செய்யலாம் என்று சட்டத் துறைக்கு அந்தத் தீர்ப்பை நாங்கள் அனுப்பியிருக்கிறோம். அது ஆய்விலே இருக்கிறது. அந்த ஆய்வு முடிந்தவுடனே மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்து பேசி, இதற்கு நல்லதொரு தீர்வை இந்த அரசு காணும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-35

(எ) ஆண்டிப்பட்டி, உடுமலைப்பேட்டை, அரசியல் கட்சிகளின் தேர்தலின்போது ஏற்பட்ட பிரச்சினை—தொடர்ச்சி

திரு. சி. கோவிந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய (தொகுதி) ஒரேயொரு நிமிடம்